# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.155/2024

### அ.சா.3 (LW 3)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.ஆனந்த்** | **தொழில்** | |
| **த/க பெயர்** | கோவிந்தராஜ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **29.01.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் நகர் கிருஷ்ணா நகரில் குடியிருந்து வருகிறேன். நான் டாக்சி ஓட்டுனராக உள்ளேன். வழக்கில் இறந்துபோன ஆனந்தகராஜ் தெரியும். அ.சா.2 ஆனந்தராஜீன் உறவினர். அவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எதிரியும் நானும் 9ம் வகுப்பு முதல் ஒன்றாக படித்து வந்தோம். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் சம்பவ நாளன்று நான் வாகனம் ஓட்டிக்கொண்டிருந்தபோது எதிரி நாகராஜ் கைபேசி மூலம் தொடர்பு கொண்டு அழுதுகொண்டே பேசினார். நாகராஜ் தன்னுடன் அறையில் வசித்து வந்த ஆனந்தராஜ் என்பவரை என்னை துாங்க விடாமல் டார்ச்சர் செய்து கொண்டு இருக்கிறார் அதனால் நான் அவரை கொலை செய்துவிட்டேன் என்று என்னிடம் கூறினார். சம்பவம் நடப்பதற்கு முன் 4 மாதங்களாக நாகராஜ் ஸ்ரீதரின் வீட்டில் வேலை செய்து வந்தார். நாகராஜ் மேற்கண்ட சம்பவத்தை என்னிடம் சொன்ன பின் நான் ஸ்ரீதரிடம் சொல்ல தொடார்பு கொண்டேன் அவர் அழைப்பை எடுக்கவில்லை அதனால் அவரது மனைவி ஆனந்தி என்பவரை அலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் சொன்னேன். நான் தகவல் சொன்ன பின் ஸ்ரீதர் வேறொரு வீட்டில் உறங்கி கொண்டு இருப்பதாகவும், மேற்படி சம்பவம் குறித்து எனக்கு பயமாக இருப்பதாகவும் அதனால் ஆனந்தியை உடனே நேரில் சென்று சம்பவ இடத்தை பார்க்க செல்லுமாறு கேட்டேன். அதன்பின் நான் நாகராஜ்க்கு போன் செய்தேன் அவர் எடுக்கவில்லை. பின் நான் ஸ்ரீதருக்கு தொலைபேசியில் அழைத்தேன் அவர் பதிலளிக்கவில்லை.

அப்போது ஸ்ரீதர் மனைவி ஆனந்தி ஏதாவது போதையில் உளறி இருக்ககூடும் என்று சொல்லிவிட்டார். ஆனந்தி காலையில் பார்த்துவிட்டு சொல்வதாக கூறி அழைப்பை துண்டித்துவிட்டார். காலை 8.30 மணியளவில் ஸ்ரீதர் எனக்கு

தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆனந்தராஜ் உண்மையில் இறந்துவிட்டதாக சொன்னார். இறந்தவரின் பெயர் ஆனந்தராஜா ஆனந்தகுமாரா என்று சரியாக தெரியவில்லை. இவ்வழக்கு சம்மந்தமாக நான் நிலகோட்டை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்துள்ளேன். மேற்படி என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் (எண்ணிக்கை 10) என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது ரெட் டாக்சி ஓட்டி வருகிறேன். என்னுடைய Location கோவிந்தாபுரம் பகுதி ஆகும். அது என்னுடைய குடியிருப்பு பகுதிதான். இரவு நேரத்திலும் சவாரி ஏற்றி வெளியிடத்திற்கு சென்று வருவது வழக்கம் தான். சம்பவ நாளன்று நான் எந்த இடத்திற்கு சவாரி சென்று வந்தேன் என்றால் வேடசந்தூர், கூம்பூர், குஜிலியம்பாறை, பாளையம், தாமரைப்பாடி போன்ற இடங்களுக்கு சவாரி சென்று விட்டு இரவு 1.30 மணிக்கு வீடு திரும்பினேன். சவாரி சென்றதற்கான டிரிப் சீட்டி போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அதேபோல் ரெட் டாக்சி நிறுவனத்திடம் நான் மேற்படி சவாரி சென்றதற்கான அத்தாட்சியை வாங்கி போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அ.சா.2 ன் தொலைபேசி எண் பதிந்து தான் வைத்துள்ளேன். அ.சா..2 யை ஏற்கனவே தொலைபேசி மூலம் பேசுவது வழக்கம் தான். நான் விவோ ஆண்ட்ராய்டு மொபைல் பயன்படுத்தி வருகிறேன். எதிரி நாகராஜ் என்னிடம் பேசியபோது நான் Call recording செய்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் ஆனந்தி, ஸ்ரீதர் உடன் தொலைபேசியில் பேசியதற்கு கால் ரெகார்டிங் செய்யவில்லை. சம்பவத்தன்று எதிரி நாகராஜ் என்னிடம் பேசியது ஒரு நிமிடமா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவர் போனில் அவர் எங்கு உள்ளார் என்ற விபரங்கள் சொல்லவில்லை.

நாகராஜ் வசித்து வந்த பகுதி எனக்கு நேரடியாக தெரியாது. அவர் அப்போது எங்கு தங்கியிருந்தார், எந்த கடையில் வேலையில் இருந்த விபரம் எனக்கு தெரியாது. இறந்துபோன நபரை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தொடர்பாக வத்தலகுண்டு காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் மதியம் சுமார் 12.00 மணிக்கு சென்றேன். என்னுடன் ரமேஷ் என்பவர் காவல்நிலையத்திற்கு சென்றோம் அப்போது எதிரி காவல்நிலையத்தில் தான் இருந்தார். ஆஜர் எதிரி உண்மையில் கொலை சம்பவம் குறித்து என்னிடம் சொல்லவில்லை என்றாலும், நான் பொய்யாக நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளித்ததாகவும், தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.01.29 20:44:19 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.